**பாணந்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மூலதன உதவி மற்றும் சேவைகளுக்கான கட்டணம் முறையே ரூபா 12,144,102 தொகை மற்றும் ரூபா 206,217 தொகை குறைவாகவும், வியாபர மற்றும் கைத்தொழில் வரி வருமானம் ரூபா 75,040 மற்றும் பொது நிர்வாக நிகழ்ச்சித் திட்டத்தின் ஏனைய வருமானம் ரூபா 5,123,642 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | பொது நிர்வாகம் மற்றும் சுகாதார சேவை நிகழ்ச்சித் திட்டங்களில் மீண்டெழும் செலவினம் ரூபா 13,364,355 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மீண்டும் பரீட்சித்துப் பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்களும் வண்டியும், தளபாடங்களும் பொருத்திகளும் என்பவற்றின் பெறுமதி முறையே ரூபா 3,474,727 ரூபா 7,500,831 தொகை, ரூபா 2,337,635 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய சேமிப்பு வங்கி கணக்கின் மீதி ரூபா 11,879,200 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | ஊழியர் பிணை வைப்பு மற்றும் ஊழியர் முதலீட்டு பெறுமதிகள் முறையே ரூபா 27,215 மற்றும் ரூபா 35,214 தொகைகள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | சபையின் உள்ளக மாற்றல் பேரேட்டு கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 115,206 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,000,000 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 1,884,794 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vii) | முன்னர் பெறப்பட்ட வருமானம் ரூபா 1,670,655 தொகை மற்றும் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 25,591,869 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 15,319,625 தொகையான வேலைக் கடன்பட்டோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | முத்திரைக் கட்டணங்களில் குறைக்கப்பட்ட ரூபா 4,494,000 | சரியாக கணக்கீடு செய்யப்பட | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான கம்பெக்டர் வாகனத்தின் கடன் தவணைப் பணத்தை மூலதனமாக்கும் போது மோட்டார் வாகனம் மற்றும் வண்டி கணக்கில் வரவு வைக்கப்படாமல் மூலதன உதவி மூலமான பங்களிப்பு கணக்கு மாத்திரம் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மோட்டார் வாகனம் மற்றும் வண்டி பெறுமதி ரூபா 4,494,000 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | |
| (x) | மீளாய்வாண்டின் இறுதியில் வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 49,652,658 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xi) | நிலுவையாக இருந்த ஏனைய வருமானக் கணக்கின் மீதியை சரி செய்தலாக ரூபா 13,010,221 பற்றாக்குறை மிகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிலுவையாக இருந்த ஏனைய வருமான கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xii) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,665,403 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xiii) | ஆண்டின் இறுதி இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 9,286,388 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (xiv) | நிலையான வைப்பு முதலீட்டு பெறுமதி ரூபா 755,388 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 144,774,172 தொகையான 05 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகள் என்பவற்றிற்கு இடையே ரூபா 7,977,197 வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கின் மீதி பேரேட்டின் பிரகாரம் ரூபா 226,971,459 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 235,209,984 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 8,238,524 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | நிலையான சொத்துக் கணக்குகளின் மீதி மற்றும் மூலதனத்திற்கான வருமான பங்களிப்பு மற்றும் மூலதன உதவி மூலமான பங்களிப்பு கணக்குகளின் மீதிக்கும் இடையே ரூபா 672,831 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | மீளாய்வாண்டின் இறுதியில் பேரேட்டின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக் கணக்கின் மீதியொன்று காணப்படாதிருந்த போதும், ரூபா 3,070,174 தொகையான மீதியொன்று நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, முற்பண பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு, வைப்புப் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலைகள் என்பன காணப்படாமையினால் ரூபா 154,839,847 கூட்டுத் தொகையான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | உரிய பதிவேடுகள் தற்போது நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | | ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | புதிய இனங்காணல்களுக்காக ஆதன வரி விபரப் படிவங்கள் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 149 ஆம் பிரிவு | | இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 10 ஹோட்டல்கள் ஆண்டின் மொத்த வருமானத்தில் ஒரு சதவீதம் வரையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | 2019 இன் சரியான பட்டியலில் தற்போதைய நிலை வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (iii) | 160 ஆம் பிரிவு | 28,738,188 | நிலுவை ஆதன வரியை அறவிடுதலின் இறுதிக் கட்டமாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தரினால் நிலுவைப் பணத்தில் ஒரு பகுதி சேகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்களும் ஒரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | சபையின் காணிகளை அளவிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(1) மற்றும் (2) | 13,900,133 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | காலாவதியான வைப்புக்கள் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | - | சபைக்குச் சொந்தமான 48 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தற்போது சில வாகனங்கள் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 51,036,602 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 58,834,435 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 37,819,124 | 35,127,666 | 32,007,426 | 29,666,989 | 25,631,310 | 31,760,665 | 18,422,124 | 26,544,049 |
| (ii) | வாடகை | 8,138,260 | 2,555,800 | 2,251,059 | 304,741 | 2,151,108 | 3,056,252 | 2,785,165 | 3,587,342 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,025,400 | 693,000 | 744,500 | (51,500) | 350,000 | 625,200 | 573,700 | 51,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 77,869,500 | 77,000,000 | 14,691,164 | 62,308,835 | 70,425,500 | 63,500,000 | 79,174,655 | 60,468,348 |
| | | 124,852,284 | 115,376,466 | 49,694,149 | 92,280,565 | 98,557,918 | 102,931,577 | 104,886,619 | 90,651,239 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

**வியாபார நிலைய வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் 2019 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு வியாபார நிலையங்களின் நிலுவை வாடகை ரூபா 3,323,087 தொகையில் ஆண்டின் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கெசெல்வத்தை அலுவலகத்தில் பயன்படுத்தப்படாத பொலிஸ் கட்டிடத்தின் நிலுவையான ரூபா 2,434,612 தொகையை பதிவழிப்பதற்கும் பழைய சந்தையில் அறவிடுவதற்கு உள்ள நிலுவைப் பணம் சம்பந்தமாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

## 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக எந்தவொரு தொகையும் கிடைக்கப்பெறாது இருந்த போதிலும், சபையின் கணக்கு வைத்தல் பிழையான முறைமையின் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண மீதியொன்று நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலுவை மீதி ஏற்படாதிருப்பதற்கு கண்கானிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள் | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 06 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டில் மேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் 2016 ஆம் ஆண்டின் போது வர்த்தமானியின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 218.3 மில்லியன் தொகையான 17 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தது. | செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். | அவசர இடர் நிலைமையின் அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டது என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| (i) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டில் 05 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு அந்த செயற்திட்டங்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | 550 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உபகரணங்களை வழங்குவதற்காக ரூபா 1,375,000 தொகை செலவில் பெறப்பட்ட உபகரணங்களில் ரூபா 317,500 பெறுமதியான 127 உபகரண தொகுதிகள் 2020 யூன் மாதம் வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | மிகுதி உபகரணங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடம் | | |
| | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பதவிகளில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், நாட்கூலி அடிப்படையில் மூன்று பேரும், அமைய அடிப்படையில் மூன்று ஊழியர்களும் மற்றும் செயற்திட்ட அடிப்படையில் 17 ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 பதவிகளில் 15 வெற்றிடங்கள் காணப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | அறிவிடப்படாதுள்ள ஊழியர் கடன் | | |
| | மரணமடைந்த, இடம் மாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 13 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய | நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

ரூபா 735,936 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையின் 1.2(அ)(ii), (iii), (iv), (v), (vi), (ix), (xi), (xii), (xvi) மற்றும் (xvii) ஆம் பந்திகளுக்குரிய அவதானிப்புக்கள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய அறிக்கையின் குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். |